# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்



# சிங்கக் கெபியிலே தானியேல்

எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Jonathan Hay; Alastair P.

தழுவியவர்: Mary-Anne S.

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2026 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.

தரியு என்பவன் பாபிலோனின் புதிய ராஜா. அவன் புத்திசாலியானவன். அவன் ஆட்சி செய்வதில் உதவி செய்வதற்கு மிகுந்த திறைமைவாய்ந்த நூற்றிருபதுபேரை தெரிந்து கொண்டான்.



பின்பு மூன்று பேரை பொறுப்பாக இருக்க தெரிந்து கொண்டான். அந்த மூன்று பேரில் தானியேல் ஒருவன்.



ராஜாவாகிய தரியு தானியேலை மிகவும் மதித்ததினாலே அவனை ராஜ்ஜியம் முழுமைக்கும் அதிபதியாக நியமிக்க நினைத்தான்.



மற்ற தலைவர்கள் பொறாமை கொண்டார்கள். அவர்கள் தானியேலிடத்தில் சில குற்றங்களை கண்டுபிடித்து ராஜாவினிடத்தில் சில சிக்கல்களை உண்டுபண்ண நினைத்தார்கள்.



அவர்கள் தீவிரமாக முயற்சி செய்தும், தானியேலைப்பற்றி ஒரு குற்றமும் கண்டுபிடிக்கமுடியவில்லை. தானியேல் செய்த எல்லாவற்றிலும் ராஜாவுக்கு உண்மையாயிருந்தான். மற்றும் அவன் எப்போதும் கவனமாகவும் புத்திச்சாலியாகவும் இருந்து, அவன் செய்த எல்லாவற்றிலும் எப்போதும் சிறப்பாகவே செயல்பட்டான்.



பொறாமை கொண்ட அந்த தலைவர்கள் ஒரே ஒரு விஷயத்தில் மாத்திரம் தான் தானியேலை குற்றம் கண்டுபிடிக்க முடியும் என்பதை தெரிந்துகொண்டார்கள்.

தானியேல் இஸ்ரவேலின் தேவனை வழிபடுவதை இந்த உலகத்தின் எந்த சக்தியாலும் நிறுத்தமுடியாது என்று தெரிந்து கொண்டார்கள்.






தானியேலின் பகைஞர்கள் ஒரு திட்டத்தை தீட்டினார்கள். அவர்கள் ஒரு புதிய சட்டத்தை உண்டுபண்ணி ராஜாவை கையொப்பம் இடச்செய்தார்கள். அந்த சட்டம் சொன்னது என்ன வென்றால் ராஜா தரியுவிடம் மாத்திரம்தான் விண்ணப்பம் பண்ணவேண்டும். யாராவது இதற்கு கீழ்ப்படியாமற்போனால், அவர்கள் சிங்க கெபிலே போடப்படுவார்கள்.

தரியு ராஜா புதிய சட்டத்திற்கு கையொப்பமிட்டான்.



அந்த புதிய சட்டம் தானியேலுக்கு எந்த வித்தியாசத்தையும் ஏற்படுத்தவில்லை. அவன் எப்பொழுதும் என்ன செய்வானோ, அதையே செய்தான். அவன் வீட்டின் ஜன்னலை திறந்து தினந்தோறும் மூன்று முறை முழங்காற்படியிட்டு, பரலோகத்தின் தேவனை நோக்கி வேண்டுதல் பண்ணினான்.







பொறாமை
கொண்ட
தலைவர்கள்
ராஜாவினிடத்தில்
அறிவிக்க
விரைந்தார்கள்.
தரியு ராஜா
தானியேலை கைது
செய்வதைத்தவிர
வேறு வழி
தெரியவில்லை.
சட்டத்திற்கு
கீழ்ப்படிந்தே
ஆகவேண்டும்.



தானியேல் சாகவே வேண்டும். ராஜா எவ்வளவோ முயற்சி செய்தும், அவன் சட்டத்தை மாற்ற எந்த வழியையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

தானியேல் தண்டனை பெற்று சிங்கப் கெபியிலே போடப்பட்டு அதன் மூலம் சாக வேண்டும். தானியேல் பசியாயிருந்த சிங்கங்களுக்குள் போடப்படுவதற்கு முன்னால், தரியு ராஜா அவனிடம் சொன்னது, "நீ தொடர்ந்து சேவிக்கிற, உன்னுடைய தேவன், உன்னை விடுவிப்பார்!"



ராஜா அந்த இரவு நித்திரை செய்யவில்லை.  அவன் அதிகாலையில் எழுந்து, சிங்கக் கெபியண்டை விரைந்தோடிசென்றான்.



தரியு ராஜா சத்தமிட்டு சொன்னது,
"ஜீவனுள்ள தேவனுடைய தாசனே,
நீ இடைவிடாமல் ஆராதிக்கிற
உன் தேவன் உன்னை
சிங்கங்களுக்குத் தப்புவிக்க
வல்லவராயிருந்தாரா?" ஒருவேளை
அவன் எந்த பதிலையும்
எதிர்பார்க்காமலிருந்திருக்கலாம்.
ஆனால் தானியேல் பதில்
கொடுத்தான்!



தானியேல் கூப்பிட்டு சொன்னது, "ஓ ராஜாவே, சிங்கங்கள் என்னை சேதப்படுத்தாதப்படிக்கு தேவன் தம்முடைய தூதனை அனுப்பி, அவைகளின் வாயை கட்டிப்போட்டார்! மற்றும் ஓ ராஜாவே, நான் உமக்கு முன்பாக எந்த நீதிகேடும் செய்ததில்லை."



தரியு ராஜா மிகுந்த சந்தோஷமடைந்தான்! தானியேலை கெபியிலிருந்து தூக்கிவிட சொல்லி கட்டளையிட்டான்.



தேவன் தானியேலை விடுதலை செய்தார் என்றும், தானியேலின் பகைஞர்கள் தேவனுக்கு பகைஞர்கள் என்று அறிந்து கொண்டான். தன்னை தந்திரமாக வசப்படுத்தி தப்பான ஒரு சட்டத்தை கையொப்பமிட செய்த எல்லோரையும் சிங்க கெபியிலே இட



கட்டளையிட்டான். சிங்கங்கள் அவர்களை சாப்பிட்டன.

தானியேல் உண்மையாக சேவித்த, பரலோகத்தின் தேவன் தான் அவனைக்காப்பாற்றினார் என்று உலகமனைத்தும் தெரிந்துகொள்ள விரும்பினான். உண்மையான தேவனை எல்லோரும் ஆராதிக்க வேண்டும் என்று அவன் ஒரு கடிதத்தை எழுதி எல்லோருக்கும் கட்டளையிட்டான். ராஜா பின்பு தானியேலை அவனுடைய கனம் மற்றும் தலைமை பொறுப்பிற்கு மீண்டும் ஏற்படுத்தினான்.



# சிங்கக் கெபியிலே தானியேல்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

தானியேல் 6

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

34

60

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16